பக்கங்கள்: 06

THEEMPUNAL

# தீம்புனல்

மாலைப் பதிப்பு

theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:38 | 26.12.2023 செவ்வாய்க்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053




# ஊடகவியலாளர் வினோதன் கைது

யாழ்ப்பாணம் வடமராட்சி நெல்லியடி பகுதியில் இயங்கும் தீம்புனல் பத்திரிகையின் ஊடகவியலாளரும் அதன் முகாமைத்துவ பணிப்பாளருமான சாந்தலிங்கம் வினோதன் பருத்தித்துறை பதில் பிரதேச செயலர் சிவசிறியின் முறைப்பாட்டை அடுத்து பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இக்கைது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வல்லிபுரம் குருக்கட்டு சித்தி விநாயகர் ஆலயத்தில் தனியாரால் பராமரிக்கப்பட்டுவரும் அன்னதான மண்டபத்தில் பிரதேச செயலர் தலைமையில் ஒன்றுகூடல் ஒன்று இடம்பெற்றுக் கொண்டிருந்தவேளை குறித்த அன்னதான மண்டத்தை பராமரித்துவரும் தீம்புனல் பத்திரிகையின் ஊடகவியலாளரும் முகாமைத்துவ பணிப்பாளருமான சாந்தலிங்கம் வினோதனின் தந்தையான சாந்தலிங்கம், அவரது மகனான வினோதனுடன் சென்று குறித்த அன்னதான மண்டபத்தை நாம் பராமரித்து வருகின்றோம். நீங்கள் அந்த வகையில் எமக்கு சொல்லாமல் எவ்வாறு கூட்டம் நடாத்தமுடியும் என கேட்டுள்ளதுடன் அங்கு கூட்டம் நடந்து கொண்டிருந்ததை புகைப்படம் எடுத்துள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த பதில் பிரதேச செயலாளர் நான் பிரதேச செயலாளர், எனக்கு அதிகாரம் உண்டு என்று கூறி தனது கடமைக்கு இடையூறு விளைவித்ததாக கூறியதால் பருத்தித்துறை பொலிஸார் தீம்புனல் நிர்வாக இயக்குநரும் ஊடகவியலாளருமான சாந்தலிங்கம் வினோதனை கைது செய்து தற்போது பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.



இது தொடர்பில் பருத்தித்துறை பதில் பிரதேச செயலர் சிவசிறியை தொடர்புகொண்டு கேட்டபோது தனது பிரதேசம் என்றும் மக்களின் முறைப்பாட்டை அடுத்து தான் அங்கு சென்றதாகவும் குறித்த அன்னதான மண்டபம் தனியாரால் பராமரிக்கப்பட்டாலும் பிரதேச செயலர் என்ற அடிப்படையில் தனக்கு எங்கும் செல்ல அதிகாரம் உண்டு என்றும், குறித்த மண்டபம் மக்களின் பணத்தில் கட்டப்பட்டது என்றும் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த ஆலயம் தொடர்பில் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்கு ஒன்று நடைபெறுதாகவும் வழக்கில் இரு தரப்பும் சமாதானமாக செல்ல இணங்கியதாகவும் ஆனால், இன்றைய தினம் பருத்தித்துறை பிரதேச செயலரால் ஒருதரப்பிற்கு மட்டும் அறிவித்த குறித்த கூட்டத்தை நடாத்தியதாகவும் எதிர்த்தரப்பால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

---

# சுனாமி பேரவலத்தில் 19 ஆவது ஆண்டு



2004 ஆம் ஆண்டு 26 ஆம் திகதி நத்தார் பண்டிகையை கலைகட்டியிருந்த வேளையில் இந்து சமுத்திரத்தின் அருகில் உள்ள இந்தோனேசியாவின் தீவுக் கூட்டங்களில் ஒன்றான சுமாத்திரா தீவின் வடக்கே கடலுக்கு அடியில் காலை 6.58 மணிக்கு 9.0 ரிச்டர் அளவில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் சுனாமி உருவானது.

சுனாமியின் தாக்கத்தால் அதிகளவான அழிவுகளை எதிர்கொண்ட இரண்டாவது நாடு இலங்கை. இங்கு சுமார் 35,322 பேரின் உயிர்கள் காவுகொள்ளப்பட்டதோடு, சுமார் 516,150 பேர் வரை இடம்பெயர்ந்துள்ளனர். அத்துடன் சுமார் 119,562 கட்டடங்கள் முற்றாக சேதமடைந்தன. வடக்கு-கிழக்கு உள்ளிட்ட கடற்கரையோரப் பகுதிகள் அதிகளவான அழிவுகளை சந்தித்தன.

கொழும்பிலிருந்து அம்பாந்தோட்டை நோக்கிச் சென்ற புகையிரதம், அதாவது மிகுந்த சனநெரிசல் மிக்க பயணிகள் புகையிரதம் கடலலையின் சீரற்றத்திற்கு இரையானது. இதில் 1700 இற்கும் மேற்பட்ட மக்கள் மாண்டு போனார்கள். இது ஆசியாவின் புகையிரத விபத்துக்களில் முக்கியமானதாகவும் உள்ளது. 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி பெரேலிய புகையிரத நிலையத்தில் சுனாமி அனர்த்தத்தில் சிக்கிய புகையிரத பயணிகள் மற்றும் புகையிரத ஊழியர்களை நினைவுகூரும் வகையில் இன்று (26) காலை கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து பெலியத்த வரை புகையிரதம் ஒன்று இயக்கப்பட்டது.

காலை 6.25 மணிக்கு மருதானை நிலையத்தில் இருந்து புறப்பட்ட புகையிரதம் 6.50 மணிக்கு கொழும்பு கோட்டை நிலையத்தில் இருந்து புறப்பட்டது. 2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தில் சிக்கிய ரயில் என்ஜின் 591 இன்று பயணிக்கின்றமை ஒரு சிறப்பு அம்சமாகும். 591 ஆம் இலக்க என்ஜினுக்கு கோட்டை ரயில் நிலைய அதிகாரிகள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

சுனாமியில் பாதிப்புக்குள்ளான பெரேலிய நிலையத்தில் சுமார் 10 நிமிடங்கள் நிறுத்தப்பட்டு சுனாமி நினைவேந்தல் நடைபெறது. சுனாமி அனர்த்தம் மற்றும் ஏனைய அனர்த்தங்களினால் உயிரிழந்த மக்களை நினைவுகூரும் வகையில் இன்று காலை 9.25 முதல் 9.27 வரை 2 நிமிட மௌன அஞ்சலியும் அனுஷ்டிக்கப்பட்டது.

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சுனாமி நினைவேந்தல்







சுனாமி பேரழிவு ஏற்பட்டு இன்று 19 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்கள் உயிரிழந்த உறவுகளுக்கு ஈகைச் சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

# இணையத்தள ஆசன முன்பதிவு சேவை வெற்றி

இணையத்தளம் மூலம் ஆசன முன்பதிவு செய்யும் சேவை மிகவும் வெற்றியடைந்துள்ளதாகவும் மாதாந்தம் எழுபத்தி ஏழாயிரம் பேர் சேவையைப் பெறுவதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்தார்.

இச்சேவை மூலம் ஒரு வருடத்தில் மூன்றரை கோடி ரூபா வருமானம் கிடைத்துள்ளதாகவும் எதிர்வரும் மார்ச் மாதம் நாடளாவிய ரீதியில் 5,300 பஸ்கள் இயக்கப்படவுள்ளதுடன், புதிதாக 800 நடத்துனர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# அமைச்சர் கெஹலியவிடம் வாக்குமூலம்

தரமற்ற நோய் எதிர்ப்பு மருந்துகளை நாட்டுக்கு இறக்குமதி செய்த சம்பவம் தொடர்பில் அவரிடம் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் வீட்டிற்குச் சென்று குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள், அவரிடம் வாக்குமூலம் பெற்றதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

# வழமைக்குத் திரும்பிய மாத்தறை சிறைச்சாலை

மாத்தறை சிறைச்சாலையில் சில கைதிகள் காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர். 17 பேருக்கு காய்ச்சல் ஏற்பட்டதையடுத்து சிறையில் கடுமையான சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள சிறைத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.

தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளதாக சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒரு நோயாளி காய்ச்சலினால் உயிரிழந்துள்ளதாகவும், கடந்த 48 மணித்தியாலங்களில் எந்தவொரு நோயாளியும் பதிவாகவில்லை எனவும் சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் காமினி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.




"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# செயலிழந்த சுனாமி எச்சரிக்கைக் கோபுரங்கள்

**2004 ஆம் ஆண்டு நடந்த சுனாமியின் கோரத் தாண்டவத்தில் இருந்து இன்னமும் தென்கிழக்கு ஆசியா மீளவில்லை. சுனாமி எச்சரிக்கைக் கோபுரங்கள் அப்போது அமைக்கப்பட்டன சுனாமி முன்னெச்சரிக்கையை அவை தரும் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருந்தது, ஆனால் அவை செயலிழந்துள்ளதாக இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.**

**அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கூற்றுப்படி, கரையோரப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 77 சுனாமி எச்சரிக்கைக் கோபுரங்களில் 57 தற்போது செயலிழந்துள்ளதாகவும், வரவிருக்கும் சுனாமி குறித்த முன்னெச்சரிக்கையை மக்களுக்கு வழங்க முடியாமல் உள்ளது.**

**2004 சுனாமியின் பின்னர், கொழும்பு மாவட்டத்தில் இரண்டு கோபுரங்களும் கம்பஹாவில் ஐந்து கோபுரங்களும் களுத்துறையில் ஆறு கோபுரங்களும் காலியில் எட்டு கோபுரங்களும் மாத்தறையில் ஏழு கோபுரங்களும் அம்பாந்தோட்டையில் ஒன்பது கோபுரங்களும் புத்தளத்தில் நான்கு கோபுரங்களும் அம்பாறையில் எட்டு கோபுரங்கள், மட்டக்களப்பில் ஏழு கோபுரங்கள், திருகோணமலையில் ஏழு கோபுரங்கள், மன்னாரில் மூன்று கோபுரங்கள், முல்லைத்தீவில் ஆறு கோபுரங்கள் மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஐந்து கோபுரங்கள்.**

**பதினொரு கோபுரங்களை பேரிடர் மேலாண்மை மையத்தில் இருந்து இயக்க முடியும் மேலும் ஒன்பது கோபுரங்கள் சம்பந்தப்பட்ட இடத்திற்குச் சென்ற பிறகு கைமுறையாக இயக்கக்கூடிய அளவில் உள்ளன.**

**ஆனால், இயக்க முடியாத கோபுரங்களின் எண்ணிக்கை 57ஐ நெருங்கியுள்ளது. இதற்கான தொழில்நுட்பத்தை அமெரிக்கன் சிக்னல் கார்ப்பரேஷன் நிறுவனம் வழங்கியுள்ளது.**

**நிர்மாணிக்கப்பட்ட பின்னர், பல தடவைகள் கோபுரங்களை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் தற்போது கோபுரங்களின் தொழில்நுட்பம் காலாவதியானதாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் பெறப்பட்ட தகவலின்படி தெரியவந்துள்ளது.**

**இதுகுறித்து பேரிடர் மேலாண்மை மைய அதிகாரி ஒருவர் நடத்திய விசாரணையில், செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி செயல்படாத சுனாமி எச்சரிக்கை கோபுரங்கள், தேவைப்பட்டால் செயல்பாட்டுக்காக இராணுவம், காவல்துறை மற்றும் சிவில் பாதுகாப்புத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.**

**அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.**

**சுனாமி எச்சரிக்கை கோபுரங்களுக்கு உரிய செயற்கைக்கோள் பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்டுள்ளதால் செயற்கைக்கோள் தொழில்நுட்பம் இல்லை என்று அந்த அதிகாரி தெரிவித்தார். நவீன தகவல் தொடர்பு முறைகள் மூலம் சுனாமி எச்சரிக்கைகளை வேகமாக வெளியிட முடியும் என்றும் அவர் கூறினார்.**

**அரசாங்கம் உரிய கவனமெடுத்து அவற்றைத் திருத்த வேண்டும். இல்லையேல் மக்கள் உயிரச்சத்துடனேயே வாழ வேண்டிய நிலை ஏற்படும்.**

# அரபிக்கடலில் இந்திய போர்க்கப்பல்கள்




இந்தியப் பெருங்கடலில் பயணித்துக் கொண்டிருந்த எம்.வி.கெம் புளூட்டோ என்ற வணிகக் கப்பல் மீது ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனையடுத்து, இந்தியா தற்போது போர்க்கப்பல்களை அரபிக்கடலில் நிலைநிறுத்தியுள்ளது.

அத்தாக்குதல் சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் ஆகும் நிலையில், இன்று மும்பை துறைமுகத்திற்கு வந்து சேர்ந்த எம்.வி.கெம் புளூட்டோ கப்பலை இந்திய கடற்படையின் வெடி மருந்துகளை அகற்றும் குழு தீவிரமாக சோதனையிட்டது.

அரபிக்கடலில் வணிகக் கப்பல்கள் நடத்தப்படும் தாக்குதல்களை கருத்தில் கொண்டு, அப்பகுதியை கண்காணிப்பதற்காக கடற்படை P-8ஐ நீண்ட தூர ரோந்து விமானத்தை அரபிக்கடலில் நிலைநிறுத்தியுள்ளது.

# இயேசு கிறிஸ்துவின் பிறப்பிடமான பெத்லகேம் வெறிச்சோடியது



இஸ்ரேல்-ஹமாஸ் போர் நடந்து கொண்டிருப்பதால், இஸ்ரேல் கட்டுப்பாட்டில் உள்ள பெத்லகேமிற்கு சுற்றுலாப் பயணிகள் பெரிதாக யாரும் செல்லவில்லை .

அதனால், கிறிஸ்துமஸ் விளக்குகள், கிறிஸ்துமஸ் மரம் எதுவுமே இல்லாமல் பெத்லகேம் நகரம் வெறிச்சோடிக் காணப்படுகிறது.

பெத்லகேம் நகரம், இஸ்ரேல் கட்டுப்பாட்டிலுள்ள பாலஸ்தீன பகுதியான மேற்கு கரையில் அமைந்துள்ளது.

இஸ்ரேல்-ஹமாஸ் போர், இனம் மற்றும் மதம் அடிப்படையிலான போர் என்பதால் பெத்லகேம் நகரத்திற்கு பொதுவாக வரும் சுற்றுலாப் பயணிகள் யாரும் இந்த வருடம் செல்லவில்லை.

அதனால், அந்த நகரத்தில் உள்ள சுற்றுலா தலங்களும் ஹோட்டல்களும் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

## 200இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் பலி

காஸாவில் இஸ்ரேலின் தாக்குதலால் கடந்த 24 மணி நேரத்தில் 200க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்ட நிலையில், அங்குள்ள பொதுமக்களைப் பாதுகாக்க அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இஸ்ரேல் பிரதமருக்கு அழுத்தம் கொடுத்துள்ளார்.

"மனிதாபிமான உதவி நடவடிக்கையை அதிகரிப்பது, உட்பட பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டிய முக்கியமான அவசியத்தையும், போர் நடக்கும் பகுதிகளிலிருந்து பொதுமக்கள் பாதுகாப்பாக வெளியேற அனுமதிப்பதன் முக்கியத்துவத்தையும், ஜனாதிபதி பைடன் வலியுறுத்தினார்" என தொலைபேசி உரையாடல் குறித்து அமெரிக்க வெள்ளை மாளிகை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# இந்துக் கோயிலில் காலிஸ்தான் ஆதரவு வாசகம்




கலிபோர்னியா மாகாணத்தில் இந்துக் கோயில் ஒன்றின் சுவரில் காலிஸ்தான் ஆதரவு வாசகங்கள் எழுதப்பட்டது தொடர்பாக அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.

கலிபோர்னியாவின் நெவார்க் நகரில் சுவாமி நாராயண் கோயில் உள்ளது.

அதில் காலிஸ்தான் அமைப்புக்கு ஆதரவாக ஸ்பிரே பெயிண்ட் மூலம் வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன. அத்துடன் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இந்தியாவுக்கு எதிரான வெறுப்பு வாசகங்களும் எழுதப்பட்டுள்ளன.

# மண்ணுக்குள் புதைக்கப்பட்டிருந்த சாராயப் போத்தல்கள் மீட்பு

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் செயல்படும் யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த ரகசிய தகவலையடுத்து நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் யாழ்ப்பாண நகரில் சட்ட விரோதமான முறையில் மதுபானம் விற்ற மூன்று இடங்கள் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டு சாராயப் போத்தல்களைக் கைப்பற்றியதுடன் மூவரைக் கைது செய்தனர்.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, கலட்டி சந்தி, முலவை சந்திப் பகுதியில் நடத்திய தேடுதலின் போது மூவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு 117 கால் போத்தல்களும் 9 முழு சாராயப் போத்தல்களும் பொலிஸ் புலனாய்வாளர்களால் மீட்கப்பட்டுள்ளது. மண்ணுக்குள் குழிவெட்டி அதற்குள் சாராயப் போத்தல்களை வைத்திருந்து விற்பனையில் ஈடுபட்டவரும் கைது செய்யப்பட்டார்.



# தனியார் பேருந்து மோதி 8 மாடுகள் பலி




மன்னார், யாழ்ப்பாணம் பிரதான வீதி நாயாத்துவழி பகுதியில் நேற்று (25) மாலை யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னார் நோக்கி பயணிகளுடன் அதிவேகமாக பயணித்த தனியார் பேருந்து நாயாத்துவழி வீதியால் சென்று கொண்டிருந்த மாடுகளின் மீது மோதியதால் 8 மாடுகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தன பல மாடுகள் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளது.

# அலுமாரியில் மறைத்து வைக்கப்பட்ட கசிப்பு மீட்பு

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் கசிப்பு விற்பனை இடம்பெறுவதாக பொலிஸாருக்கு இரகசிய தகவலையடுத்து, தேடுதல் நடத்திய பொலிஸார் வீட்டினுள் இருந்த அலுமாரி ஒன்றினுள் இருந்து, 30 போத்தல் கசிப்பினை மீட்டதுடன் அங்கிருந்த பெண்ணையும் கைது செய்தனர்.

# கதிர்காம ஆலய பிரதான பூசகர் மாயம்

கதிர்காமம் ஆலயத்தின் பிரதான பூசகர் சோமிபால டி.ரத்நாயக்காவை காணவில்லை என அவரது மகள்களும் மற்றுமொரு குடும்ப உறவினரும் கதிர்காமம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

தந்தை சமீபத்தில் தனது மூத்த சகோதரி ஒருவருடன் வீட்டை விட்டு வெளியேறியதாகவும் அதன் பின்னர் இதுவரை அவரைப் பற்றிய எத்தகவலும் கிடைக்கவில்லை என்றும் அவர்கள் பொலிஸில் தெரிவித்துள்ளனர்.

பிரபல பாதாள குழு உறுப்பினரான அங்கொட லொக்காவின் மனைவியால் கதிர்காமம் ஆலயத்திற்கு வழங்கிய 38 பவுண் தங்கத கடு காணாமற் போனதையடுத்து, ஆலயத்தின் தலைவர் பிரதான பூசகர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தை விசாரணை செய்த குழுவினர், கதிர்காமம் ஆலயத்தின் களஞ்சிய சாலை காப்பாளராக இருந்த சுட்டி கபுரல என்பவரைக் கைது செய்து பின்னர் பிணையில் விடுவித்துள்ளனர்.

# மேலதிக நீர் வெளியேற்றத்தால் விவசாயிகள் பாதிப்பு

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் மேலதிக நீர் வெளியேற்றத்தின் காரணமாக சுமார் எண்ணாயிரம் ஏக்கர் வரையான நெற்பயிர்கள் பகுதியளவிலும் முழுமையாகவும் அழிவடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

ஒவ்வொரு விவசாயிகளும் ஏக்கர் ஒன்றுக்கு சுமார் ஒரு இலட்சத்து 76 ஆயிரத்து 300 ரூபாய் வரையான இழப்பினை எதிர்கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக இரணைமடுக்குளத்தின் வான்கதவுகள் மூலம் மேலதிக நீர் திறந்து விடப்பட்டு அதிக அளவான நீர் வெளியேற்றப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இரணைமடுக்குளத்தின் கீழ் உள்ள தாழ்நில பகுதிகளான பண்ணங்கண்டி, முரசுமோட்டை ஐய்யன் கோவிலடி, பழைய வட்டக்கட்சி, கண்டாவளை போன்ற பகுதிகள் ஒரு வாரகாலத்துக்கு மேலாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

# நுவரெலியாவில் அதிகரித்த சுற்றுலாப் பயணிகள்



இறுதி விடுமுறையினை முன்னிட்டு நாட்டில் பல்வேறு பாகங்களிலிருந்து நுவரெலியா மாவட்டத்தினை நோக்கி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் செல்கின்றனர்.

வார இறுதியில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஏனைய விடுமுறை நாட்களில் வெளி மாவட்டங்களிலிருந்தும் வெளி நாடுகளிலிருந்தும் பெருந்தொகையான சுற்றுலாப் பயணிகள் நுவரெலியாவிற்கு சென்றானர்.


அரச, அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு தற்போது விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையிலும் நத்தார் பண்டிகை விடுமுறை மற்றும் புத்தாண்டு விடுமுறை என தொடர்கிறது இதனால் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் நுவரெலியாவுக்கு விடுமுறையினை கழிப்பதற்காக வருகை தந்துள்ளதாக கூறப்படுகிறது.

# அபாய நிலையில் 700 மரங்கள்

கொழும்பு மாநகர சபையின் அறிக்கையின்படி, கொழும்பு நகரில் ஏறத்தாழ 700 மரங்கள் அபாய நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

200 மரங்கள் முழுமையாக அகற்றப்படுவதற்கு அடையாளம் காணப்பட்டுள்ளதாக மாநகர ஆணையாளர் திருமதி பத்ராணி ஜயவர்தன குறிப்பிட்டார்.

இதேவேளை, கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 50 வருடங்களுக்கு போதுமான மரங்களை நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக ஆணையாளர் பத்ராணி ஜயவர்தன குறிப்பிட்டார்.







# யாழ்ப்பாணம் புனித மரியன்னை தேவாலயத்தில் நத்தார் விசேட திருப்பலி நள்ளிரவு ஒப்புக்கொடுப்பு





# உடுத்துறையில் சுனாமி நினைவேந்தல்








# பாகிஸ்தான் ரி20 பயிற்சியாளராக யாசிர் அராபத் நியமனம்

பாகிஸ்தான், நியூஸிலாந்துக்கு அணிகளுக்கு இடையேயான ரி20 கிரிக்கெட் தொடருக்கு முன்னதாக பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் உயர் செயல்திறன் பயிற்சியாளராக முன் னாள் ஆல்ரவுண்டர் யாசிர் அராபத்தை அந் நாட்டு கிரிக்கெட் சபை நியமித்துள்ளது. நியூஸிலாந்துக்கு எதிராக ஜனவரி 12 முதல் ஐந்து போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி நியூஸிலாந்தில் விளையாட உள்ளது. இன்னும் ஆறு மாதத்தில் ரி20 உலகக் கோப்பை நடைபெற உள்ள நிலையில், அணியின் செயல்திறனை மேம்படுத்துவ



தற்காக தற்போது யாசிர் அணியின் செயல்திறனை மேம்படுத்துவதற்கான பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். பாகிஸ்தான் அணி நியூஸிலாந்து சுற்றுப் பயணத்திற்கு கிளம்பும் முன், யாசிர் அபாரபத் லாகூர் சென்று அணியுடன் இணைய உள்ளார்.

பந்து வீச்சு பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பித்தவருக்கு ஜாக்பாட் ஒருநாள் உலகக் கோப்பை தோல்விக்கு பிறகு பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், அணியின் பந்து வீச்சு பயிற்சியாளர் பதவிக்கு யாசிர் அராபத் விண்ணப்பித்தார். அவர் ஏற்கெனவே நியூஸிலாந்து, இங்கிலாந்து ஆகிய அணிகளுக்குப் பயிற்சியாளராக இருந்த தகுதியைக் கொண்டுள்ளார்.

இதனால் அவரது திறமையை முழுமையாகப் பயன்படுத்த விரும்பிய பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ரி20 உயர் செயல்திறன் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். 2009 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடந்த ஐ.சி.சி ரி20 உலகக் கோப்பை வென்ற அணியில் யாசிர் அராபத்தும் இடம் பெற்றிருந்தார். டெஸ்ட் கிரிக்கெட்டில் வெறும் மூன்று போட்டிகளில் மட்டுமே விளையாடி இருந்தாலும் அணிக்காக ஒயிட்பால் கிரிக்கெட்டில் அதிக போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.

# ஐ.பி.எல் ஐ இழக்கும் ஆப்கான் வீரர்கள்?

நவீன் உல் ஹக், முஜீப் உர் ரஹ்மான், ஃபசல்ஹக் ஃபரூக்கி ஆகியோரின் 2024 மத்திய ஒப்பந்தங்களை ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை தாமதப் படுத்துவதாக அறிவித்துள்ளது. அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு அவர்கள் வெளிநாட்டு லீக் போட்டிகளில் விளையாட தடையில்லா சான்றிதழ் வழங்க வேண்டாம் என முடிவு செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இது குறித்து ஆப்கான் கிரிக்கெட் சபை இன்ஸ்டாகிராமில் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில், ஆப்கானிஸ்தானுக்காக விளையாடுவதைவிட அவர்களின் தனிப்பட்ட நலன்களுக்கு முன்னுரிமை அளித்ததற்காக கூறியுள்ளது. ஐ.பி.எல் 2024 தொடரில் அந்த மூன்று வீரர்களும் விளையாடுவது கேள்விக்குறி ஆகியுள்ளது.

துபாயில் நடைபெற்ற ஐ.பி.எல் 2024க்கான மினி




ஏலத்தில் முஜீப் உர் ரஹ்மானை கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி வாங்கியது.

தற்போது நடந்து வரும் பிக்பாஷ் லீக்கில் மெல் போர்ன் ரெனகேட்ஸ் அணியில் அவர் விளையாடி வருகிறார்.

நவீன் உல் ஹக் மற்றும் ஃபசல்ஹக் ஃபரூக்கி முறையே லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் மற்றும் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகளால் தக்கவைக்கப்பட்டு உள்ளனர். ஆப்கான் கிரிக்கெட் சபைதடையில்லா சான்றிதழ் கொடுக்க மறுத்திருந்தாலும் இந்த விவகாரத்தில் வீரர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி சரிசெய்யப்படும் எனத் தெரிகிறது.

# அமெரிக்க வாட்டர் போலோ அதிகாரி ஓய்வு பெறுகிறார்

பாரிஸ் 2024 ஒலிம்பிக்கிற்குப் பிறகு அமெரிக்காவின் வாட்டர் போலோ தலைமை நிர்வாக அதிகாரி கிறிஸ் ராம்சே ஓய்வு பெறுகிறார். 17 அமெரிக்காவின் வாட்டர் போலோ தலைமை நிர்வாக அதிகாரியாக கிறிஸ் ராம்ஸே சிறப்பாகச் செயலாற்றினார்.


அவரது தலைமையின் கீழ், அமெரிக்க வாட்டர் போலோ உறுப்பினர் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கியுள்ளது. சமீபத்திய ஆண்டுகளில் தேசிய ஜூனியர் ஒலிம்பிக் போட்டிகளை மிகப்பெரிய போட்டியாக நிறுவுவதில் அவரது முயற்சிகள் முக்கிய பங்கு வகித்தன. 2006 ஆம் ஆண்டிலிருந்து வாட்டர் போலோவின் முக்கியமானவர்களில் ஒருவராக அவர் விளங்கினார். அவர் விளையாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில் தலைமைப் பாத்திரத்தை வகித்தார். தேசிய ஒலிம்பிக் ஆளும் குழுவில் ஒலிம்பிக் இயக்கத்தின் முக்கிய பதவிகளில் அதிக ஆண்டுகள் செலவழித்தவர்களில் ராம்ஸேயும் ஒருவர். அமெரிக்க வாட்டர் போலோ உறுப்பினர் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் கண்டுள்ளது. கடந்த பத்தாண்டுகளில் உறுப்பினர் எண்ணிக்கை 50,000 ஆக இரு மடங்காக அதிகரித்துள்ளது.



2023 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 1,000 அணிகள் போட்டியிடும் உலகின் மிகப்பெரிய வாட்டர் போலோ போட்டியான தேசிய ஜூனியர் ஒலிம்பிக்கின் வெற்றியை விரிவுபடுத்துவதில் ராம்ஸே முக்கிய பங்காற்றினார், மேலும் மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கினார்.

பெண்கள் அணி தொடர்ந்து மூன்று ஒலிம்பிக் தங்கப் பதக்கங்களையும் ஐந்து உலக பட்டங்களையும் வென்றது, அதேசமயம் ஆண்கள் அணி வரலாற்று முடிவுகளை அடைந்தது, 2008 இல் ஒலிம்பிக் வெள்ளிப் பதக்கத்தை வென்றது, 2024 பாரிஸ் ஒலிம்பிக்கில் ஒரு மேடைப் போட்டியை இலக்காகக் கொண்டது.

# கபடியில் 1001 ரெய்டு புள்ளிகள் பெற்ற நவீன் எக்ஸ்பிரஸ்




சென்னையில் நடந்த பெங்கால் வாரியர்ஸுக்கு எதிரான தபாங் டெல்லி அணியின் ஆட்டத்தின் போது நவீன் குமார் புரோ கபடி லீக்கில் 1001 ரெய்டு புள்ளிகளைப் பூர்த்தி செய்தார். இதன் மூலம் பர்தீப் நர்வால், மனிந்தர் சிங், பவன் செஹ்ராவத், ராகுல் சவுதாரி மற்றும் தீபக் ஹூடா ஆகியோருக்குப் பிறகு புரோ கபடி லீக் வரலாற்றில் 1000 புள்ளிகள் ரெய்டு சாதனை படைத்த ஆறாவது வீரர் ஆனார். 990 புள்ளிகளுடன் திங்கட்கிழமை களமிறங்கிய நவீன், ஒரு சூப்பர் 10 ஐப் பதிவு செய்து இந்த மைல் கல்லை எட்டினார். நவீன் எக்ஸ்பிரஸ் என்ற புனைப் பெயர் கொண்ட அவர், லீக்கின் ஏழாவது மற்றும் எட்டாவது சீசன்களில் மிகவும் மதிப்புமிக்க வீரர் என்ற விருதை வென்றது குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 26.12.2023 அன்று வெளியிடப்பட்டது.